**றுவான்புற அதிவேகபாதை செயற்திட்டம் - 2019**

---

றுவான்புற அதிவேகபாதை செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. நாட்டின் தந்திரோபாய மற்றும் சமூக நிலைமையை முன்னேற்றுவதற்காக தெற்கு அதிவேக பாதை மற்றும் மத்திய அதிவேக பாதைக்கும் இடையில் புதிய அதிவேக பாதையை நிர்மாணிப்பது செயற்திட்டத்தின் நோக்கமாகும். செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக்கிரயம் அன்னளவாக ரூபா 286,000 மில்லியனானதுடன் அமைச்சரவை அமைச்சானது திறைசேரியின் செயலாளரின் கண்காணிப்பின் கீழ் உள்நாட்டு வங்கி முறைமையினால் நிதியளிக்க தீர்மானித்திருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

---

செயற் திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரான நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. பௌதீக முன்னேற்றம்

## 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

கஹதுடுவ தொடக்கம் பெல்மடுல்ல வரையான அதிவேகப்பாதையின் 73.9 கி.மீ களின் நிர்மானத்திற்கான வேண்டுகோள் 2016 ஓகஸ்ட் 23 இல் அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டமானது தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் எழுப்பப்பட்ட விடயங்கள் காரணமாக 2019 திசெம்பர் 31 வரை நிர்மான வேலைகளை ஆரம்பிக்க முடியாமலிருந்தது. மேலும், அமைச்சரவை அமைச்சர்கள் அனைத்து முன்னைய உடன்படிக்கைகளை ரத்து செய்து உள்நாட்டு வங்கி நிதியிட்டல் வசதிகளின் கீழான உள்நாட்டு ஒப்பந்ததாரர்களினால் நிர்மான வேலைகளை செய்து முடிக்க 2020 ஜூலை 01 இல் தீர்மானித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன்படி, கஹதுடுவ தொடக்கம் இங்கிரிய வரையான 24.3 கி.மீ இற்கான கூறுவிலைதாரர்களின் முன்தகமைகள் 2020 செப்தம்பர் 30 இல் உள்ளவாறு பரீட்சிக்கப்பட்டிருந்தது.

## 2.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமிருந்தான சுற்றுச்சூழல் விளைவு மதிப்பீட்டு அறிக்கை தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் எழுப்பப்பட்ட விடயங்கள் காரணமாக, 2020 செப்தம்பர் 30 வரை பெறப்பட முடியாமல் இருந்தது. இருப்பினும் செயற்திட்டமானது அவ் அறிக்கையினை பெற்றுக்கொள்வதற்கு முன்னர் ஆரம்ப கட்ட வடிவமைப்புக்களின் தயாரிப்பு, முன்கூறுவிலை செயலாற்றல் மற்றும் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் மீதான அதன் செயற்பாடுகளை ஆரம்பித்திருந்தது. | வீதி நிர்மானத்தினை ஆரம்பிப்பதில் தாமதத்திற்கான சாத்தியம் காணப்படுவதுடன் செயற்திட்டத்தின் கிரயமும் அதிகரிக்கும். | உரிய திகதி வரையான சுற்றுச்சுழல் விளைவு மதிப்பீட்டின் (இ.ஐ.எ) செயலாற்றல் 99% ஆகும். | தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் எடுப்பப்பட்ட அடிப்படை விடயங்களை தீர்க்கவும் அனுமதிகளை துரிதப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை காணி மீட்பு அபிவிருத்தி கூட்டுத்தாபனம் ரூபா 66.44 மில்லியன் கிரயத்தில் செயற்திட்டத்தின் நீர்வளங்கள் கற்கைக்காக | வீதி நிர்மான வேலைகளை ஆரம்பிப்பதில் தாமதத்திற்கான சாத்தியம். | நெடுஞ்சாலைகள் அமைச்சு விபரமான நீர்வளகற்கை மற்றும் டிஓஆர், ஒப்பந்த உடன்படிக்கையில் கையொப்பமிடல் மற்றும் | ஒப்பந்தத்தின் காலம் மற்றும் ஒப்பந்தத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் போன்றவற்றுடன் தொடர்புபட்ட |

| | | | |
|---|---|---|---|
| தெரிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அவ் உடன்படிக்கைக்காக எவ்வித முறையான ஒப்பந்தமும் இல்லை. அதன் பெறுபேறாக, அறிக்கையானது 2 வருடங்களின் பின்னரும் கூட கூட்டுத்தாபனத்தினால் பூர்த்திசெய்யப்பட்டிருக்காததுடன் 2020 ஜுன் 20 இல் மதிப்பீட்டு கிரயமானது ரூபா 91.10 மில்லியனாக மாற்றியமைக்கப்பட்டது. அறிக்கைகளை சமர்ப்பிப்பதன் தாமதம் செயற்திட்டத்தினை பாதகமாக பாதிக்கும். | | மதிப்பீடுகளை இறுதியாக்கல் போன்ற அதன் விடயங்களையும் பரீசீலனை செய்ய தொழிநுட்ப மதிப்பீட்டு குழு ஒன்றை நியமித்திருந்தது. | முறையான உடன்படிக்கை முன்னரே கையொப்பமிடப்படல் வேண்டும். |

**2.3 காணி சுவீகரிப்பின் மீதான விடயங்கள்**

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| கிடைக்கப்பபெற்ற தகவல்களின் பிரகாரம், 406 அரச காணித்துண்டுகள் உள்ளடங்களாக 1,965 காணித்துண்டுகள் செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்ய பட்டியலிடப்பட்டிருந்தது. இருப்பினும், காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் இறுதியாக்கப்பட்ட இழப்பீட்டு திட்டம் இல்லாததன் காரணமாக மந்தமாக காணப்பட்டது. கொடுப்பனவுகளின் தாமதம் காணி சுவீகரிப்பு மீதான வட்டி கிரயங்களை அதிகரிப்பதன் ஊடாக பாதகமான முறையில் பாதிக்கும். | வீதி நிர்மான வேலைகளை ஆரம்பிப்பதில் தாமதத்திற்கான சாத்தியம். | அமைச்சரவைக்கான குறிப்பானை, கொடுப்பனவு திட்டத்தினை இறுதியாக்குவதற்கு நெடுஞ்சாலைகள் அமைச்சினால் தயாரிக்கப்படுகின்றது. | காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.4 குறைவாக பயன்னடுத்தப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| ரூபா 100 மில்லியன் தொகையான ஒரு ஒதுக்கீடு மீளாய்வாண்டிற்காக பாதீட்டு மதிப்பீட்டினால் வழங்கப்பட்டிருந்தது. அதில், மொத்தமாக ரூபா 49 மில்லியன் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் வேறு ஒரு செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. எனவே, தேரிய ஏற்பாடுகள் ரூபா 51 மில்லியனில், ஒதுக்கீட்டில் 87 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 44.35 மில்லியன் மாத்திரமே காணி சுவீகரிப்பின் தாமதம் காரணமாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | நிதி முகாமையில் பலவீனமான கட்டுப்பாடுகள். | 2019 ஆம் ஆண்டிற்கான காணி சுவீகரிப்பு மற்றும் மீளவழங்களிற்கான ஆரம்ப கட்ட பாதீட்டு ஒதுக்கீடு ரூபா 100 மில்லியன் தொகையாகும். அதில், அமைச்சு ரூபா 49 மில்லியனில் வேறு செயற்திட்டங்களிற்கு மாற்றியிருந்ததுடன் ருவன்புர அதிவேகப்பாதையின் இவ்வாண்டிற்கான மிகுதி ரூபா 51 மில்லியனாகும். இருப்பினும் மேற்கூறிய தொகையில் 87% பயன்படுத்தப்பட்டது அது ரூபா 44.35 மில்லியனாகும். காணி சுவீகரிப்பு செயன்முறைக்கான பூர்த்தியாக்கப்பட்ட இழப்பீட்டு திட்டத்தின் தாமதம் காரணமாக, செயற்திட்டம் திட்டமிட்ட தொகை ரூபா 51 மில்லியனை அடைய முடியாமலிருந்தது. | ஒரு ஒருங்கிணைந்த செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன் நிதிகளை வினைத்திறனாக பயன்படுத்த அதனடிப்படையில் ஒதுக்கீடுகளிற்கு வேண்டுகோள் விடப்படவும் வேண்டும். |